# பொருளாதார மீட்சிக்கான பொதுவான குறைந்தபட்ச நிகழ்ச்சித் திட்டம்

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தால் தொகுக்கப்பட்டது

4 ஜூன் 2022

நாம் முன்னெப்போதுமல்லாத நெருக்கடியில் இருக்கின்றோம். 2001-02 எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி காலகட்டத்திலிருந்து பயனுள்ள ஒப்பீடுகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. 90 ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையின் பெரியளவான மந்தநிலையின் வெளிப்பாட்டின் ஒரு பகுதியாக, ஒரு சில ஆண்டுகளில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 80 அமெரிக்க டொலர்களில் இருந்து 33 ஆக சரிந்தபோதான நிலையை போன்றதாக இருக்கலாம்.

தெற்காசியாவில் (சர்வதேச ஒப்பீடுகளில் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில்) அதிகமான வருமான சமத்துவமின்மையை இலங்கை கொண்டுள்ளதுடன் பெருந்தொற்று மற்றும் நடமாட்ட முடக்கல்களால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு சிறிதளவான இழப்பீட்டை வழங்கியுள்ளது. குறைந்தளவிலான சமூக பொருளாதாரங்களில் உள்ள நமது குடிமக்களால் அதிகமான அதிர்ச்சிகளைத் தாங்க முடியாது. எந்த வலியும் இல்லாமல் இந்த நெருக்கடியிலிருந்து மீள முடியாது. ஆனால், நன்கு சிந்திக்கப்பட்ட மீட்புத் திட்டத்தின் மூலமாக, குறிப்பாக மிகவும் நலிவுற்றவர்களுக்கான வலியைக் குறைக்கலாம்.

கடந்த காலத்தில் இருந்ததைப் போல, நிதி ஒழுங்குமுறைக்கான உறுதிமொழிகளை நாம் சாத்தியமான முதல் சந்தர்ப்பத்திலேயே கைவிடக்கூடாது. இந்த சீர்திருத்தங்களுக்கான உறுதிப்பாட்டில் நாம் உறுதியாக இருக்க வேண்டும், ஏனெனில் அவை நமது தீர்மானங்களாகும் என்பதுடன், இதுவே நிகழ்வுகளின் மீள் இடம்பெறுகையை தவிர்க்கும் ஒரே வழியாகும்.

கடினமான, ஆனால் அவசியமான, சீர்திருத்தங்களுக்கு பொறுப்பாகிவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக, IMF நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டமைப்பிற்குள் பணியாற்றுவதை அரசியல் தரப்பினர் ஏற்க விரும்பவில்லை. அதனால்தான், பங்குபெறும் அனைத்துக் கட்சிகளுக்கும் அர்த்தமுள்ள பங்கை வழங்கும் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பாராளுமன்றத்தின் அரசியலமைப்புப் பொறுப்பில் தொகுக்கப்பட்ட ஒரு பொதுவான குறைந்தபட்ச நிகழ்ச்சித் திட்டத்திற்கு உறுதியளிக்க வேண்டியது அவசியமாகும்.

நாம் பல தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிபுணத்துவம் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் 10 மாத காலப்பகுதிக்கு மேலாக உருவாக்கப்பட்ட பொருளாதார மீட்சிக்கான பொதுவான குறைந்தபட்ச நிகழ்ச்சித் திட்டத்தை கீழே வழங்குகிறோம். நெருக்கடியின் அடிப்படைக் காரணங்களை நிவர்த்தி செய்யும் மற்றும் நெருக்கடியை நிர்வகிப்பதற்கு அவசியமான பின்வரும் பகுதிகளில் உடனடியாக அமுல்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் வழங்கப்படுகின்றன:


1. பேரினப்பொருளாதார ஸ்திரத்தன்மை (ப. 2)
2. வருமான பலப்படுத்தல் (ப. 2)
3. முதன்மை செலவினக் கட்டுப்பாடு (ப. 3)
4. பொதுத்துறை மற்றும் SOE முகாமைத்துவம் (ப. 4)
5. சமூக பாதுகாப்பு நடவடிக்கை (பக்கம் 4)
6. சக்தி மற்றும் பயன்பாட்டு சேவைகள் (ப. 5)
7. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை (பக்கம் 6)
8. மீட்டெடுப்பதற்கு முக்கியமான விசேட சட்டவாக்கம் (ப. 6)


## ஆவணம் எவ்வாறு உருவாக்கப்பட்டது

2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், சமூக நீதிக்கான தேசிய இயக்கம் நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கும், இது மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கும் தேசியளவில் ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்தது. கொள்கை நிலைகளை உருவாக்குவதற்கான நிபுணத்துவத்தைப் பெறுவதற்கான அதன் நடைமுறைக்கு ஏற்ப, ஜூலை 2021 முதல் "கதிகவா" வலைத்தள தொடர்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து, ஊடகங்கள் மற்றும் வேறுவகையில் மேலும் கலந்துரையாடுவதற்காக மூன்று மொழிகளிலும் பொதுவான குறைந்தபட்ச நிகழ்ச்சித் திட்டத்தின் வரைவு பெப்ரவரி 2022 இல் வெளியிடப்பட்டது.

அதே நேரத்தில், அரசியல் கட்சிகள், சங்கங்கள் மற்றும் சிந்தனையாளர்கள் உட்பட பல்வேறு அமைப்புகள் பரிந்துரைகளை வெளியிட்டன. கடந்த சில மாதங்களில் விரிவான உள்ளடக்கலை உறுதி செய்வதை கடினமாக்கும் வகையில் பல பரிந்துரைகள் வெளியிடப்பட்டன. குறுகிய காலத்திற்குள் அமுல்படுத்தக்கூடிய பொருளாதார பரிந்துரைகள் கருத்தியல் ரீதியாக பரந்த ஆவணங்களின் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன (இணைப்பு 1). அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வினைத்திறனான மற்றும் சிறப்பான இலக்குகளைக் கொண்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை நிறுவுதல் போன்ற விடயங்களில் குறிப்பிடத்தக்க உடன்பாடு காணப்பட்டது. வர்த்தகம், அரசு சொத்துக்கள் போன்ற விடயங்களில்

வேறுபாடுகள் இருந்தன. ஒப்பீட்டு பகுப்பாய்வின் முடிவுகள் பொருளியல் நிபுணர்கள் குழுவிற்கு (இணைப்பு 2) வழங்கப்பட்டதுடன், அவர்கள் விடயங்கள் மற்றும் முன்னுரிமையில் மாற்றங்களை பரிந்துரைத்தனர். மீளாய்வு செய்யப்பட்ட பரிந்துரைகள் வணிகத் தலைவர்கள் குழுவிடம் (இணைப்பு 3) சரிபார்ப்புக்காக வழங்கப்பட்டன. ஆவணம் முழுவதிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இறுதி ஆவணம் அடிப்படை ஆவணத்திலிருந்து கணிசமாக வேறுபடுகிறது.

**முன்மொழிவுகள்**

பகுப்பாய்வு மற்றும் சரிபார்ப்பின் போது அடையாளம் காணப்பட்ட எட்டு விடயங்களின் கீழ் முன்மொழிவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு விசேட பரிந்துரைகளுடனும், குறுகிய கால (2022 க்குள்); நடுத்தர கால (2023 இறுதிக்குள்); மற்றும் நீண்ட கால (2023 க்குப் பிறகு நிறைவு) என நடவடிக்கைக்கான பொருத்தமான கால எல்லையை அடையாளம் காணுமாறு பொருளாதார வல்லுநர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். கால எல்லைகள் கலந்துரையாடலுக்கான ஆரம்ப புள்ளிகளாக மட்டுமே வழங்கப்படுகின்றன.

**1. பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை**

பொருளாதாரக் குழு அமைக்கப்பட்டுள்ளதாலும், ஆலோசகர்களின் தெரிவு பூர்த்தியடைந்திருப்பதாலும், IMF உடனான கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், சிறந்த கைகளில் இருப்பதாகக் கருதப்படும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளுக்கப்பால் கீழே உள்ள முன்மொழிவுகள் பார்க்கப்படுகின்றன. மேற்கூறிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பல அடிப்படை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த ஆவணம் இறுதி செய்யப்பட்ட நேரத்தில் அமுலாக்கப்பட்ட பரிந்துரைகள் விலக்கப்பட்டுள்ளன.

பேரினப் பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்கு இன்றியமையாததாகக் கருதப்படும் மத்திய வங்கியின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் நாணய விதிச் சட்டத்திற்கு (வரைவு வடிவில் உள்ளது) முன்னுரிமை அளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. அரச கடன் பற்றிய தரவு எல்லா நேரங்களிலும் துல்லியமாக இருப்பதையும், பல்வேறு வகையான கடன் மற்றும் உத்தரவாதங்களை முகாமை செய்வதற்கு ஒரு தொழில்முறையான அணுகுமுறை பின்பற்றப்படுவதை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. முன்மொழியப்பட்ட அரச கடன் அலுவலகம் உயர் தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களைக் கொண்ட ஒரு உயரடுக்கு அமைப்பாக இருக்க வேண்டும். இந்த அலுவலகம் மத்திய வங்கிக்குள் அமையாத பட்சத்தில், அத்தகைய நிபுணர்களுக்கு போதுமான இழப்பீட்டுப் பொதிகளை வழங்குவது சவாலாக இருக்கும் என

உணரப்பட்டது. எவ்வாறாயினும், அரச கடன் அலுவலகத்தை மத்திய வங்கிக்குள் வைப்பது வங்கியின் மைய நோக்கங்களில் இருந்து விலக்குமா என்பது குறித்து கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டன.

| நடவடிக்கை | கால எல்லை |
|---|---|
| அனைத்து தற்போதைய வெளிநாட்டு கடன் மற்றும் உத்தரவாதங்கள் தொடர்பில் கணக்காய்வை நடாத்துதல் | S |
| ஆண்டின் இறுதிக்குள் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பை முடிவுறுத்தல் | S |
| சுயாதீன மத்திய வங்கியை நிறுவுதல், பணம் அச்சிடுவதற்கு ஒழுங்குமுறையைக் கொண்டுவருவதற்கு நாணயச் விதிச் சட்டமூலத்தை நிறைவேற்றுதல், CBSL இன் நிறுவனரீதியான சுயாதீனத்தை கட்டியெழுப்புதல் மற்றும் பணவீக்க இலக்குக்கான சட்டகத்தை சட்டமூலமாக உருவாக்குவதல். | S |
| CBSL உள்நாட்டு இருப்புநிலைக் குறிப்பை, சந்தை வட்டி விகித அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு வரவுகளுடன் சேர்த்து கவனமாக வரிசைப்படுத்தப்பட்ட முறையில் படிப்படியாக நீக்கவும். | M |
| மிகவும் திறமையான (மற்றும் ஊதியம் பெறும்) நிபுணர்கள் தேவைப்படுகின்ற ஒரு மத்திய அரச கடன் அலுவலகத்தை உருவாக்கவும். அதற்கு இலங்கை மத்திய வங்கியினுள் இடமளிப்பதில் குறைபாடு உள்ளது. சட்டத்தை செயற்படுத்த தேவைப்படலாம் | M |
| உள்நாட்டு நாணயக் கடன் மறுசீரமைப்பைக் குறைக்கவும். உள்நாட்டு மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்றால், சில ஒழுங்குமுறை சகிப்புத்தன்மையுடன் நடவடிக்கையை மீள்பரிசீலனை செய்ய வரையறைப்படுத்தவும் (இது அரச கடன் அலுவலகத்தின் கீழ் இருக்கலாம்). பிணைப் பத்திரங்களாக மாற்றுவதையும் CSE இல் பட்டியலிடுவதையும் கருத்தில் கொள்ளுங்கள். | M |

## 2. வருமான பலப்படுத்தல்

IMF நிகழ்ச்சித் திட்டத்தில் நுழைவதற்கு, ஒரு முதன்மை உபரியின் காலஎல்லையுடன் பிணைக்கப்பட்ட அடைவிற்கான அர்ப்பணிப்பு தேவைப்படும் என்பது கிட்டத்தட்ட உறுதியானதாகும். இதற்கு தற்போதைய நிலையை விட வருமானத்தை உயர்த்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தைப் பொருட்படுத்தாமல், இது பாராட்டத்தக்க குறிக்கோளாகும். 2019 டிசம்பருக்கு முன்பு இருந்த வரி முறைமையை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, கீழே உள்ள முன்மொழிவுகள் 2019 வருமான நடவடிக்கைகளின் மறுசீரமைப்புக்கு அப்பாற்பட்டவையாக பார்க்கப்படுகிறது.

சேவைகளுக்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் அரச சொத்துக்களிலிருந்து வரும் வருமானங்களை அதிகரிப்பதன் மூலம் வரி அல்லாத வருமானத்தை அதிகரிப்பது அவசியமாகும்.

இருப்பினும், அதே நேரத்தில் வருமானத்தைச் சேகரிப்பதற்கான செலவுகளைக் குறைப்பதற்கும் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்துவதற்கும் கவனம் செலுத்தினால் சிறந்ததாகும். உதாரணமாக, காகிதப் பணிகளை இலகுவாக்குவதுடன், சேகரிப்பின் தடவைகளை சரிசெய்யலாம். கட்டணம் அதிகரிக்கும் போது சேவை தரத்தை மேம்படுத்தினால் எதிர்ப்பு குறைவாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. சில சந்தர்ப்பங்களில், சேகரிக்கப்பட்ட கட்டணம் பொறுப்பான நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிதியங்களுக்கு செல்கின்றது. செயற்பாடுகளுக்குத் தேவையானதை விட அதிகமான நிதிகள் திரட்டு நிதியத்திற்கு செலுத்தப்படுவது முக்கியமானதாகும்.

முதலீட்டாளர்களுக்கு வரி விலக்கு அளிக்கும் நடைமுறையில் பல எதிர்மறை விடயங்களும் உள்ளன. 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்தித் திட்டங்கள் (SDP) சட்டத்தின் கீழான வரிவிலக்குகள் நிறுத்தப்பட வேண்டும். தற்போது SDP அந்தஸ்தை அனுபவிப்பவர்கள் கூட குறைந்தபட்ச மாற்றீட்டு வரிக்கு உட்படுத்தப்பட்டு, 15 சதவீதமாக முன்மொழியப்பட்டிருக்க வேண்டும். இலங்கை அடிப்படை விலகல் மற்றும் இலாப மாற்றீட்டுக் (BEPS) கட்டமைப்பில் இணைய வேண்டும். முற்போக்கான தொழிற்துறை வரி விதிப்பு, கடுமையான இடைநிறுத்தங்கள் இல்லாமல், பரிந்துரைக்கப்படுகிறது.

சுங்கத்துறை உத்தியோகத்தர்களின் வெகுமதி திட்டங்களில் மாற்றங்கள் உட்பட சுங்கத்துறை சீர்திருத்தங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. சிக்கலான தீர்வை கட்டமைப்புகள் மூன்று-நிலை திட்டத்துடன் பிரதியீடுசெய்யப்பட வேண்டியதுடன் எல்லைத்தீர்வைகள் படிப்படியாக அகற்றப்பட வேண்டும்.

இலங்கையின் வருமான நிர்வாகத்தில் உள்ள குறிப்பிடத்தக்கதான பலவீனங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். சவாலானதாக இருந்தாலும், உள்நாட்டு வரி வருமானம், சுங்கம் மற்றும் கலால் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் ஒருங்கிணைந்த வருமான நிர்வாகம் அவசரத் தேவையாகும்.

| நடவடிக்கை | கால எல்லை |
|---|---|
| நிறுத்திவைக்கும் வரிகளை (மூலதனம் மற்றும் சேவை கட்டணங்கள் உட்பட) மீண்டும் | S |

| | |
|---|---|
| அறிமுகப்படுத்தி விரிவுபடுத்தவும் | |
| அரசாங்க சொத்துக்களை மதிப்பிடுவதற்கும், வரி அல்லாத வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கும் ஒரு செயலணியை உருவாக்கவும். அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள், கட்டணங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் வருமானம் ஆகியவற்றின் மீதான வருமானத்தை அதிகரிக்கவும். அதே நேரத்தில் சேவையின் தரம் மேம்படுத்தப்படுவதை உறுதிசெய்யவும். நிறுவனங்களின் குறிப்பான நிதியங்கள் இருக்கும் இடத்தில், திரட்டு நிதியத்திற்கு அவை வருவதை உறுதி செய்ய வேண்டும். | S |
| நீண்ட கால, நிலையான வரிக் கொள்கையை உருவாக்குங்கள், FDIக்கான வரிச் சலுகைகள் இல்லை | M |
| முன்னேற்றகரமான, விகித அதிகரிப்பு படிப்படியாக இருக்கும் தொழிற்துறை வரி பரிபாலனத்தை உருவாக்கவும் | M |
| வரி செலுத்துவோரின் கோப்புகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவை மாற்றியமைப்பதன் மூலம், வருமான வரி தளத்தை விரிவுபடுத்துங்கள் | M |
| வரி வசூலிக்கும் பொறிமுறைகளை மேம்படுத்துதல் | M |
| BEPS டிஜிட்டல் பொருளாதார கட்டமைப்பில் கையெழுத்திடுங்கள். பன்னாட்டு நிறுவனங்களுக்கு 15% குறைந்தபட்ச மாற்றீட்டு வரியை அறிமுகப்படுத்துங்கள் (பிரிவு 2). 15% குறைந்தபட்ச மாற்றீட்டு வரி செலுத்த வேண்டிய புதிய முதலீட்டிற்கு SDP அந்தஸ்தை வழங்குவதை நிறுத்துதல். | M |
| மேம்படுத்தப்பட்ட அபாய அடிப்படையிலான விசாரணைகள், சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி திட்டங்களில் சீர்திருத்தம் மற்றும் நியாயமற்ற ஊக்கத்தொகைகளை நிவர்த்தி செய்வதற்கு அபராதங்களை நியாயப்படுத்துதல் போன்ற சுங்கத்துறை சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல் | M |
| 3 நிலைகளின் கீழ் வரியை ஒழுங்குபடுத்துவதுடன் எல்லைத்தீர்வைகளை நீக்கவும் (VAT இனால் மாற்றீடு செய்யவும்) | M |
| 3 நிறுவனங்களுக்கான (சுங்கம், கலால் மற்றும் உள்நாட்டு வரி வருமானம்) ஒருங்கிணைந்த வருமான நிர்வாகத்தை நிறுவுதல் | L |

### 3. முதன்மை செலவினக் கட்டுப்பாடு

2002 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் ஏற்பாடுகள் துல்லியமாக பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. சட்டம் இயற்றப்பட்டதில் இருந்து அதனுடைய ஏமாற்றமளிக்கும் அடைவைப் பார்க்கும்போது, சட்டத்தை வலுப்படுத்துவதற்கும் இணக்க கலாச்சாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் இடையிலான ஒப்பீட்டுரீதியான முக்கியத்துவத்தில் கருத்துக்கள் வேறுபட்டிருந்தன. இறுதியில், புதிதாக சக்தி பெற்ற குடிமக்களால் வழங்கப்படும் ஈடுபாட்டுடன் கூடிய மேற்பார்வையின் மூலம் இணக்கப்பாடு கவனிக்கப்படலாம் என்ற அடிப்படையில் திருத்தங்களுக்கு ஆதரவு கிடைத்தது.

சாத்தியக்கூறுகள் இல்லாத பெரிய கடன்-நிதி திட்டங்கள் பற்றிய கரிசனை, தேசிய பௌதிக திட்டத்திற்கு இணங்கிய மற்றும் கூறப்பட்ட அனைத்து நியதிகளை பூர்த்தி செய்வதாக

மதிப்பிடப்பட்ட திட்டங்களை கட்டாயப்படுத்தும் முன்மொழிவில் பிரதிபலிக்கிறது. பௌதிக திட்டத்திற்கு பொறுப்பான நிறுவனம் பொருத்தமான அமைச்சில் இருக்க வேண்டியதுடன் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு போதுமான நிதியளிப்பு மற்றும் வலுவூட்டலை பெற்றிருக்க வேண்டும்.

| நடவடிக்கை | காலப்பகுதி |
|---|---|
| நடைமுறையில் உள்ள நிதியியல் எண்களை நிவர்த்தி செய்வதற்கு, நிதியியல் முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தை இறுக்கமாக்குதல். தப்பிக்கும் விதிகள் (விதிகளிலிருந்தான நியாயமான விலகல்கள்) மற்றும் மீண்டெழுவதற்கான பாதை, பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுடன் [ஏற்கனவே செயற்பட்டிருக்கலாம்] என்பதை தெளிவாக வரையறுத்தல். | S |
| தேசிய பௌதிக திட்டத்திற்கு வெளியே இருக்கும் மற்றும் கடுமையான சாத்தியக்கூறு ஆய்வு, நிதி பகுப்பாய்வு, சுற்றுச்சூழல் பகுப்பாய்வு அல்லது சமூக பகுப்பாய்வு இல்லாமல் அமுல்படுத்தப்படும் அனைத்து செயற்திட்டங்களையும் நிறுத்துதல் | S |
| சாத்தியமான போது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற நீண்ட கால திட்டங்கள் மீதான பொது பாதீட்டில் இருந்தான மூலதன செலவினங்களை மீள் முன்னுரிமை செய்தல் | S |

## 4. அரச துறை மற்றும் SOE முகாமைத்துவம்

அரச துறை ஆட்சேர்ப்புகளை முடக்குவது கடுமையாகப் பரிந்துரைக்கப்படுவதுடன், அனைத்து பணி வெற்றிடங்களும் ஏற்கனவே அரச பணியில் உள்ளவர்களைக் கொண்டு நிரப்பப்படும் (green sheeting). யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்திற்குப் பின்னரும் பாதுகாப்புச் செலவீனங்கள் மிக அதிக அளவில் உள்ளதுடன், அவற்றில் பெரும்பாலானவை மீண்டு வரும் செலவினங்கள் என்பதுடன், படை நவீனமயமாக்கலுக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. பாதுகாப்பு செலவினங்களை சீரமைக்கவும் குறைக்கவும் தீவிர முயற்சி பரிந்துரைக்கப்படுகிறது.

அரசாங்கம், ஆயுதப் படைகள் மற்றும் SOE களின் உண்மையான பணியாளர் தேவைகள் கணக்கிடப்பட்டு, மேலதிக பணியாளர்கள் மீள் பணி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தலைமைபதவி நிலையில் ஆரம்பித்து, பொதுச் சேவையில் உள்ள பணியாளர்களின் திறனை மேம்படுத்த அரசு பெரியளவான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். உற்பத்தி செயற்திறனை உறுதிப்படுத்த, அவர்களுக்கு தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும். இது கணினிகள் போன்ற தெளிவாக தெரியக்கூடிய விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்படாமல், முறையான செயற்திறன் மீளாய்வுகள், தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பயிற்சிக்குத் தேவையான வளங்களை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இலங்கை அரசின் நீண்டகால அவதானிப்பாளரான பேராசிரியர் மிக் மூர், ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நேரத்தில் அரச ஊழியர்களை அதிக உற்பத்தி

திறனுடையவர்களாக ஆக்குவதற்கு செலவிடப்பட்ட வளங்கள் வீழ்ச்சியடைந்தமையை ஆவணப்படுத்தியுள்ளார்.

குறைந்தபட்சம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்ற ஓர் உயர்நிலை SOE ஐ தனியார்மயமாக்குவது, ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி, கடன் வைத்திருப்பவர்களுக்கும் பல்வேறு ஆர்வமுள்ள குழுக்களுக்கும் நோக்கத்தின் தீவிரத்தன்மையை வெளிப்படுத்தும். அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள், விலக்களிக்கப்பட்டவையாக முன்னுரிமைப்படுத்தப்பட்டவை, கொள்வனவு ஆற்றல் சமநிலையுள்ளவையாக மறுசீரமைக்கப்பட்டவை அல்லது முகாமைத்துவ சீர்திருத்தத்திற்கு ஆளான நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்கு ஒரு செயலணி நிறுவப்பட வேண்டும். SOEகள் ஏகபோகமாக அல்லது பாதுகாக்கப்பட்ட வழங்குனர்களாக செயற்படும் சந்தைகள் தாராளமயமாக்கப்பட வேண்டும்.

அனைத்து SOE களும், கணக்கியல் தரநிலைகளை கடைப்பிடிப்பதை மேம்படுத்தும் மற்றும் பொருத்தமான நிபந்தனைகளின் கீழ் CSE இல் பங்குகளை மிதக்க அனுமதிக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கட்டுப்படுத்தும் நிறுவனங்களாக மாற்றப்பட வேண்டும். SOE களின் சபைகளுக்கு நியமிக்கப்பட்ட நபர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, வங்கி சபைகளுக்குப் பயன்படுத்தப்படும் " பொருத்தப்பாடு மற்றும் சரியான தன்மைக்கான சோதனை" போன்ற நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் SOE களுக்கு கடினமான பாதீட்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். SOE களுக்கு கடன் வழங்கும் போது சாதாரண அபாய மதிப்பீட்டு நியதிகளைப் பயன்படுத்துமாறு அரச வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

| நடவடிக்கை | காலப்பகுதி |
|---|---|
| அரச துறை ஆட்சேர்ப்பு முடக்கம். அரசாங்கம், ஆயுதப்படைகள் மற்றும் SOE களின் பணியாளர் தேவைகளை கணக்கிடுதல். கீழ் மட்டங்களின் எந்தவொரு ஆட்சேர்ப்புக்கும் green sheeting தேவையாகும். பாதுகாப்பு செலவினங்களை மறுபரிசீலனை செய்து மீள்மதிப்பீடு செய்யவும் | S |
| SOEs மீது கடுமையான பாதீட்டு கட்டுப்பாடுகளை விதிக்கவும், SOEs இற்கான அனைத்து மூலதனம் மற்றும் தற்போதைய பரிமாற்றங்களை நிறுத்தவும் | S |
| தக்கவைக்கப்பட்ட அரச துறை ஊழியர்களுக்கான குறிப்பாக உயர்மட்ட ஊழியர்களுக்கான திறனை கட்டியெழுப்புவதில் ஈடுபடுதல் | M |
| அரச துறைக்கான விளைவு அடிப்படையிலான KPIகளை உருவாக்குதல் | M |

| | |
|---|---|
| உயர்நிலை SOEகளை தனியார்மயமாக்குதல் (உதா. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்); பொருத்தமான இடங்களில் கொள்வனவு ஆற்றல் சமநிலையுள்ளவைகளை நிறுவுதல்; SOE களின் செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல் | M |
| பொருத்தமானவிடத்து SOEகள் செயற்படும் சந்தைகளை தாராளமயமாக்குதல் | M |
| அரச வங்கிகளால் SOE களுக்கு அபாய மதிப்பீட்டு கடன் வழங்குதல் | M |
| பொறுப்புகளை கட்டுப்படுத்தவும் தரவு தரத்தை மேம்படுத்தவும் கூட்டுத்தாபனங்கள்/சபை/திணைக்களங்களை நிறுவனங்களாக மாற்றுதல். நியமனம் செய்வதற்கான முறையான பொறிமுறையை நிறுவுதல் (பொருத்தப்பாடு மற்றும் சரியான தன்மைக்கான சோதனை போன்றவை) | L |
| பிரதான நிறுவனங்களுக்கு தொழில்முறை நிலையிலான கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறைகளை கொண்டு வருதல் - புதுப்பிக்க முடியாதவற்றுக்கு முகாமைத்துவ கணக்காய்வை நடாத்துதல். மறுசீரமைக்க முடியாதவை முழுமையாக மீளக் கட்டமைக்கப்பட அல்லது மாற்று வழி கண்டறியப்பட வேண்டும். | L |

## 5. சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள்

நலன்புரி நன்மைகள் சபைச் சட்டமூலம் 2002-ல் சட்டமானது, ஆனால் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சபையை செயற்படுத்தவும், தரவுத்தளங்களை பூரணப்படுத்தவும், சமூக பாதுகாப்பு நடவடிக்கையை உடனடியாக அமுல்படுத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது. பேரழிவுடன் தற்போதைய சூழ்நிலையில் உள்ள ஒற்றுமைகள் காரணமாகவும், அரசாங்கத்திடமிருந்து வழக்கமான நன்மைகளைப் பெறும் 77 சதவீத குடும்பங்கள் வங்கிக் கணக்குகளை அணுகுவதாக கணக்கெடுப்புகள் காட்டுவதாலும், காலப்போக்கில் மேம்படுத்தல்களை இலக்காக கொண்டு, நடமாடும்சேவை பணக் கணக்குகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணப் பரிமாற்றத்தை மேற்கொள்ளவும் பரிந்துரைக்கப்படுகிறது.

| நடவடிக்கை | காலப்பகுதி |
|---|---|
| சனத்தொகையில் நலிவடைந்த பிரிவுகளுக்கு பணப் பரிமாற்றங்களை வழங்குதல்; வங்கிக் கணக்குகள்/ நடமாடும்சேவை பணக் கணக்குகளுக்கு நேரடியான பணப் பரிமாற்றங்களை வழங்குதல் | S |
| சமூக பாதுகாப்பு நடவடிக்கை கொடுப்பனவை செலுத்துவதற்கான இலக்கை மேம்படுத்தல் | M |
| நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் நலன்புரித் திட்டங்களை ஒருங்கிணைத்து ஒருங்கிணைக்கப்பட்ட பயனாளிகளின் தரவுத்தளத்தை உருவாக்குதல் | M |

## 6. சக்தி மற்றும் பயன்பாட்டு சேவைகள்

சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்படாத பெற்றோலியப் பொருட்கள் நாட்டின் மொத்த சரக்கு இறக்குமதி கட்டணத்தில் அண்ணளவாக 15 சதவிகிதம் ஆகும் (இது 2022 இல் இன்னும் அதிகமாக இருக்கலாம்). பல ஆவணங்களில் பரிந்துரைக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளுக்கான சூத்திர அடிப்படையிலான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, இருப்பினும் உண்மையான சூத்திரமும் கால இடைவெளியும் தெளிவற்ற நிலையில் உள்ளது. இந்த கூறுகளை நிவர்த்தி செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

எரிபொருள் மின்சார உற்பத்திக்கு ஒரு முக்கிய உள்ளீடாக இருப்பதாலும், குழாய் நீர் உற்பத்திக்கான குறிப்பிடத்தக்க உள்ளீடாக இருப்பதாலும், இந்த பயன்பாட்டு சேவைகளுக்கும் சூத்திர அடிப்படையிலான விலையை நீட்டிக்க வேண்டியது அவசியமாகும். சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் இறக்குமதி செலவீனம் மற்றும் ரூபாயின் மதிப்பை பிரதிபலிக்கும் வகையில் சில்லறை விலையை மாற்றி அமைத்து வருவதாக தெரிகிறது. சமையல் எரிவாயு உட்பட அனைத்து பெற்றோலியப் பொருட்களும் ஒரு துறை சார்ந்த சட்டத்தின் மூலம் பயன்பாட்டு ஒழுங்குமுறையின் கீழ் கொண்டு வர பரிந்துரைக்கப்படுவதுடன், விலை மற்றும் தர ஒழுங்குமுறை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருளில் 60 சதவீதத்திற்கு மேல் போக்குவரத்திற்காக செலவிடப்படுவதால், அதிகளவான பயணிகளை வினைத்திறனான போக்குவரத்து முறைமைகளுக்கு மாற்ற ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தற்போதைய இருப்பு பற்றாக்குறை மற்றும் உலக சந்தைகளால் ஏற்படும் ஏற்ற இறக்கத்தை சமாளிக்க முடியாது. இதற்கு பொதுப் போக்குவரத்துக்கு முதன்மை என்ற கொள்கைக்கு மாறுவதுடன் தனியார் போக்குவரத்திற்கு தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு வகையான மானியங்கள் அகற்றப்பட வேண்டும். இந்த மாற்றத்திற்கு தேவையான முதலீடுகளை வெளியக மூலங்களிலிருந்து பெற வேண்டியிருக்கும்.

மின்சார இடையூறு பொருளாதாரத்திற்கு பல்வேறு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. தொழில்துறை மற்றும் நுகர்வோருக்கு வழக்கமான மின் விநியோகத்தை உறுதி செய்வதற்கு, காற்று மற்றும் சூரிய ஒளியில் இருக்கும் ஏராளமான சக்தியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். இந்த ஒழுங்கற்ற மூலங்களிலிருந்து சக்தியைப் பெறுவதற்கும், நாடு முழுவதும் அவ்வப்போது ஏற்படும் மின்சார செயலிழப்புகளின் காரணத்தை அகற்றுவதற்கும், பரிமாற்றக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு மேலதிக முதலீடுகள் அவசியமாகும். பரிமாற்ற வலையமைப்பு தற்போது ஒரு தனி உரிமத்தின் கீழ் இயக்கப்படுகிறது, ஆனால் குறித்தொதுக்கப்பட்டதாகவோ (ring-fenced) சுயாதீனமாக செயற்படும் நிறுவனமாகவோ இல்லை. தேவையான முதலீடுகள் செய்யப்படுவதற்கும்,

கொள்முதல்களை சரியான நேரத்தில் முடிக்கவும், wheeling போன்ற சேவைகள் அறிமுகப்படுத்தப்படுவதற்கும், சுயாதீனமாக செயற்படும் நிறுவனமாக அதை உருவாக்குவது அவசியமாகும்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் உரிமை விலக்கல் முடிவடைந்த பின்னர், இலங்கை விமான நிலையங்களுக்கு விமான சேவைகளை குறிப்பாக குறைந்த கட்டண விமான சேவைகளை உள்ளீர்ப்பது அவசியமாகும். மத்தள முழுமையாக தாராளமயமாக்கப்பட்டுள்ளது. கொழும்பில் குறைந்தபட்சம் ஐந்தாவது சுதந்திர நிலை வரையான தாராளமயமாக்கலை பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும். தரைவழிக் கையாளுதல் சேவைகளை வழங்குவதற்கான உரிமைகள் விலக்கலின் ஒரு பகுதியாக விமான நிறுவனத்துடன் இணைக்கப்படக்கூடாது. தற்போது போட்டியற்ற தரைநிலை கையாளுதல் சேவைக் கட்டணங்களைக் குறைத்தல் மற்றும் விமான நிலையத்தைப் பயன்படுத்தும் அனைத்து விமான நிறுவனங்களையும் பாரபட்சமின்றி நடாத்துதல் உட்பட விமான நிலையத்தின் நிர்வாகத்தை மேம்படுத்த தனியான மற்றும் கவனம் செலுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| நடவடிக்கை | காலப்பகுதி |
|---|---|
| வெளிப்படையான, தன்னியக்கமான சந்தை அடிப்படையிலான சக்தி மற்றும் நீர்க்கட்டணத்தை நடைமுறைப்படுத்தவும் | S |
| அனைத்து பெற்றோலியப் பொருட்களையும் சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்துதல் | S |
| வெளிநாட்டு உதவி மூலம் பொது போக்குவரத்தில் முதலீடு செய்தல் | M |
| தேவையான முதலீடுகளை அனுமதிக்கவும் மற்றும் wheeling போன்ற சேவைகளை அறிமுகப்படுத்தவும் பரிமாற்ற கட்டமைப்பை தனியாக்கவும் | M |
| குறைந்த கட்டண விமானங்களை விமான நிலையம் உள்ளீர்க்கும் வகையில் தரைநிலை கையாள்தல் சேவைகள் சீர்திருத்தப்படும். | M |
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் 5 வது சுதந்திர உரிமை நிலை வரை தாராளமயமாக்கலை மேற்கொள்ளல் | M |

## 7. வர்த்தகம் மற்றும் தொழில்துறை

2018 ஆம் ஆண்டின் தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தின் கீழ் நிறுவப்பட்ட குழுக்கள் ஏற்றுமதியாளர்கள் அனுபவிக்கும் சிரமங்களைக் கண்டறியப் பயன்படுத்தப்பட வேண்டும். இந்தக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டால், ஏற்றுமதிக்கான தடைகளை நீக்க விரைவான நடவடிக்கை எடுக்க முடியும். இவற்றில் முக்கியமான உள்ளீடுகளின் இறக்குமதிக்கான உரிமங்கள் மற்றும் வங்கி தொடர்பான சிக்கல்கள் போன்ற தடைகள் பெரிய அளவில் இடம்பெறும். ஏற்றுமதியை மேம்படுத்த வேண்டுமானால், கடந்த சில ஆண்டுகளாக

ஏற்படுத்தப்பட்ட ராஜ்(raj) உரிமம் அகற்றப்பட வேண்டும். ஏற்றுமதிக்கான இறக்குமதியின் அவசியம் உணரப்பட வேண்டும்.

நெருக்கடி மற்றும் அதனுடன் இணைந்த அடிப்படை உட்கட்டமைப்பு சேவைகளின் தோல்வி ஆகியவை கைத்தொழில் வலயங்களை மீண்டும் கலந்துரையாடலுக்கு கொண்டு வந்துள்ளன. 1980 களில் இருந்ததைப் போலன்றி, செயற்பாட்டாளர்களே முதலீடுகள் மற்றும் குத்தகைதாரர்களின் ஆட்சேர்ப்பு ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாகும் தனியாரால் நிர்வகிக்கப்படும் கைத்தொழில் வலயங்களை அனுமதிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

| நடவடிக்கை | காலப்பகுதி |
|---|---|
| சீர்குலைவுகளை அகற்றுவதன் மூலமாகவும், இறக்குமதி கட்டுப்பாட்டாளர்களின் செயற்பாட்டை மீள்பரிசீலனை செய்வதனாலும் ராஜ் உரிமத்தை திரும்பப் பெறுவதனாலும் வர்த்தக வசதி சீர்திருத்தங்களை விரைவாக்கல் | S |
| ஏற்றுமதிக்கான இறக்குமதியின் அவசியம் தொடர்பான புரிதலை ஊக்குவித்தல் | S |
| தனியார் கைத்தொழில் வலயங்களுக்கான சட்டவாக்கத்தை உருவாக்குதல் | M |

## 8. மீட்டெடுப்பதற்கு முக்கியமான விசேட சட்டவாக்கம்

நெருக்கடியின் விளைவாக அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் தோல்வியடைவதுடன் நூறாயிரக்கணக்கான அல்லது அதனிலும் அதிகமான ஊழியர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எதிர்பார்க்கப்படாத நிகழ்வுகளுக்கு வினைத்திறனாக பதிலளிக்கும் திறன் தற்போதைய சட்டவாக்கத்திடம் இல்லை. அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடிய புதிய திவாலடைதலுக்கான சட்டங்கள் (bankruptcy laws) விரைவாக இயற்றப்படாவிட்டால், மீண்டெழுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். அதே வழியில், நெருக்கடியின் விளைவாக வேலை இழக்கும் ஊழியர்களைக் கையாள்வதற்கான பணிநீக்க தொழிலாளர் சட்டத்தை (TEWA) விட யதார்த்தமான பொறிமுறை அமைக்கப்படாவிட்டால், நிறுவனங்களால் தப்பிப் பிழைக்க இயலாது.

| நடவடிக்கை | காலப்பகுதி |
|---|---|
| அனைத்து நிறுவனங்களுக்கும் ஒருங்கிணைந்த திவாலடைதலுக்கான சட்டங்களை விரைவாக உருவாக்கவும் | S |
| TEWA ஐ வேலையின்மை காப்பீட்டு நிதியத்தால் பிரதியீடு செய்தல் | S |

மேலதிக தகவலுக்கு: ரொஹான் சமரஜீவ +94 77 735 2361


## இணைப்பு 1: கொள்கை முன்மொழிவு ஒப்பீடு


பரந்த அளவிலான கருத்தியல் பார்வைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எட்டு கொள்கை முன்மொழிவுகள் இந்த ஆவணத்தின் அடிப்படையை உருவாக்கியது. அகர வரிசைப்படி கருத்திற் கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் பின்வருமாறு:

| ஆசிரியர் | முன்மொழிவின் பெயர் |
|---|---|
| Advocata Institute | **பொருளாதாரத்தை மீளமைப்பதற்கான 7 படி கொள்கைப் பரிந்துரை** |
| இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) | **நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்மொழிவுகள்** |
| எல்லே குணவன்ச தேரர் (EGT) | පුනර්ජීවනයේ මහජන සම්මුතිය |

| | |
|---|---|
| சுயாதீனமான பொருளாதார வல்லுநர்கள் (IE) | **அவசர பொருளாதார ஸ்திரப்படுத்தல் திட்டம்** |
| சமூக நீதிக்கான தேசிய இயக்கம் (NMSJ) | **இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கு பதிலளிப்பதற்கான பொதுவான குறைந்தபட்ச நிகழ்ச்சித் திட்டம்** |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | **தற்போதைய சவால்களை சமாளிப்பதற்கான விரைவான பதிலளிப்பு** |
| ஐக்கிய மக்கள் சக்தி (SJB) | **இலங்கை பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஐ.ம.ச இன் 9 அம்ச செயற்திட்டம்** |
| 43 வது படைப்பிரிவு | **நம்பிக்கையை நிலைநிறுத்துவோம்: மீட்டு செழித்து வளர** |

முன்மொழிவுகள் 15 பரந்த கருப்பொருள் பகுதிகளை உள்ளடக்கியது. நாங்கள் மிகுந்த பொருளாதாரத் தொடர்புடைய எட்டு விடயங்களில் கவனம் செலுத்தினோம் (பின்னர் பொருளாதார வல்லுநர்கள் மற்றும் வணிகத் தலைவர்களுடனான ஆலோசனையைத் தொடர்ந்து திருத்தப்பட்டது - இணைப்புகள் 2 மற்றும் 3 ஐப் பார்க்கவும்).




இந்த பகுதிகளில் பலவற்றில் சீர்திருத்தங்கள் தேவை என்பதில் பரந்தளவான ஒருமித்த கருத்து காணப்பட்டது.[1]

| *Theme* | *Advocata* | *BASL* | *EGT* | *IE* | *NMSJ* | *NPP* | *SJB* | *43 Brigade* |
|---|---|---|---|---|---|---|---|---|
| செலவீன கட்டுப்பாடு | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

[1] இங்கே பட்டியலிடப்பட்டுள்ள சில கொள்கை முன்மொழிவுகள் ஆசிரியர்களின் பார்வையின் விரிவான விளக்கத்தை வழங்காது. குறிப்பான நடவடிக்கைகளிலுள்ள வேறுபாடுகள், கருத்தியல் மற்றும் நிபுணத்துவம் போன்ற காரணிகளுடன், முன்மொழிவு வெளியீட்டின் நேரம்/முன்மொழிவில் கருதப்படும் கால எல்லைகளால் உருவானவையாகும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கடன் முகாமைத்துவம் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பண மற்றும் நாணயமாற்று விகிதக் கொள்கை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ |
| வருமான ஒருங்கிணைப்பு | ✓ | | | ✓ | ✓ | | ✓ | ✓ |
| வர்த்தகம் | ✓ | | ✓ | | ✓ | ✓ | | ✓ |
| தொழில்துறைகள் | ✓ | ✓ | ✓ | | | ✓ | | ✓ |
| சக்தி மற்றும் பயன்பாட்டு சேவைகள் | | | | ✓ | ✓ | | | ✓ |

## இணைப்பு 2: பொருளாதார வல்லுனர்களுடன் கலந்தாலோசிப்பதில் பங்கேற்பாளர்கள்

### மூத்த பொருளாதார நிபுணர்கள்

- கலாநிதி சரத் ராஜபத்திரன்
- பேராசிரியர்.சிறிமல் அபேரத்ன
- முர்தாசா ஜாஃபர்ஜி

### இளம் பொருளாதார நிபுணர்கள்

- ரெஹானா தௌஃபீக்
- சாயு தம்சிங்க
- உமேஷ் மொரமுதலி
- Naqiya Shiraz
- கே.டி விமங்கா
- அனுஷ்கா விஜேசின்ஹா
- கயானி ஹுருல்லே

### மற்றவர்கள்

- கௌரவ கரு ஜயசூரிய
- பேராசிரியர்.ரோஹான் சமரஜீவ
- தனநாத் பெர்னாண்டோ

**இணைப்பு 3: வணிகத் தலைவர்களுடனான ஆலோசனையில் பங்கேற்பாளர்கள்**

- கிருஷன் பாலேந்திரா
- ரொஹான் பல்லேவத்த
- சஞ்சீவ வீரவர்ண
- ஹனிஃப் யூசுப்
- மங்கள போயகொட
- சமந்தா ரணதுங்க
- தேவா ரோட்ரிகோ
- ஆர்.மணிவண்ணன்
- சுஜான் விஜேவர்தன

**மற்றவர்கள்**

- கௌரவ. கரு ஜயசூரிய
- பேராசிரியர் ரொஹான் சமரஜீவ
- கயானி ஹுருல்லே
- தனநாத் பெர்னாண்டோ
- ஹரீந்திர தசநாயக்க